மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம் (DTCP) ஈரோடு மாவட்டம்

மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம்

முத்துக்கவுண்டன்பாளையம் ஊராட்சி

ஈரோடு மாவட்டம், மொடக்குறிச்சி வட்டம், முத்துக்கவுண்டன்பாளையம் ஊராட்சி, நஞ்சைஊத்துக்குளி கிராமம், ரீ.ச.எண்:229/3A1, 6 -ல் அமையும் உத்தேச குடியிருப்பு மனைப்பிரிவிற்கான திருத்திய தொழில்நுட்ப ஒப்புதல் வரைபடம். (திட்டமில்லா பகுதி)

அளவு : 1 அங்குலம் = 33 அடி (1:400)

Online Application No : IJM1WSQD DATE : 26.12.2025

குறிப்பு :

மனைப்பிரிவின் மொத்தப்பரப்பு : 1.8754 ஏக்கர் (அ) 7589.74 ச.மீ

கோரிய மனைகள் : 33

ஒதுக்கிய மனைகள் : 33

மனைப்பிரிவின் எல்லை ----------

நிலையிலுள்ள சாலை ----------

உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை

மனைப்பிரிவின் சாலை : 2113.16 ச.மீ

பூங்கா : {மனைப்பிரிவின் பரப்பு- மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு}x10%

: {7589.74 - 2113.16} x 10% = 547.65 ச.மீ (547.65 ச.மீ ஈடாக அரசு வழிகாட்டி மதிப்பீட்டின் படி உரிய தொகை மனுதாரரால் அரசுக்கு செலுத்தப்பட்டுள்ளது)

பொது உபயோகம் மற்றும் மின்பகிர்மான கழகத்திற்கு தேவையான பரப்பு : {மனைப்பிரிவின் பரப்பு - மனைப்பிரிவு சாலைகளின் பரப்பு} x 1.0%

: {7589.74 - 2113.16} x 0.5% = 27.38 ச.மீ

பொது உபயோகம் - (A) : 53.07ச.மீ (0.98%)

(பிழைதிருத்தல் தான ஆவண எண் : 125/2026 நாள்:07.01.2026-ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.)

தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின் பகிர்மான கழகத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டவை:

பொது உபயோகம் - (B) : 41.40 ச.மீ (0.76%)

(பிழைதிருத்தல் தான ஆவண எண் : 126/2026 நாள்:07.01.2026-ல் ஒப்படைப்பு செய்யப்பட்டுள்ளது.)


கட்டிட வரம்பு:

9.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ விடப்படல் வேண்டும்

9.0மீ-க்கு மேல் 18.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 3.0 மீ விடப்படல் வேண்டும்

மூலை முடக்கு:

12.0மீ வரை அகலம் உள்ள சாலைகளுக்கு 1.5மீ x 1.5மீ-ம் விடப்படல் வேண்டும்



செயற்பொறியாளர், கீழ்பவானி வடிநிலக்கோட்டம், ஈரோடு அவர்களின் கடிதஎண்:வ.3/கோ.107/309M/2025/நாள்:11.07.2025-கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மனுதாரரின் இடத்திற்கு செல்ல ரீ.ச.எண் : 229/5-ன் குறுக்கே 9.0மீ அகலத்தில் உத்தேச சிறுபாலம் அமைக்க அனுமதி பெறப்பட்டுள்ளது.

செயற்பொறியாளர், கீழ்பவானி வடிநிலக்கோட்டம், ஈரோடு அவர்களின் கடிதஎண்:வ.3/கோ.107/307M/2025/நாள்:11.07.2025-கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மனுதாரரின் இடத்திற்கு செல்ல ரீ.ச.எண் : 229/5-ன் குறுக்கே 9.0மீ அகலத்தில் உத்தேச சிறுபாலம் அமைக்க அனுமதி பெறப்பட்டுள்ளது.

அளவர் / உதவி வரைவாளர்	திருவெங்கடாச்சலம்
வரைவாளர் நிலை- III	கா.வேல்முருகன்
மேற்பார்வையாளர் / வரைவாளர் நிலை- II	மு.தேன்மொழி

Signature valid
Signed by: Assistant Director
Location:Erode
Date:2026.01.12 21:51:07

Signature valid
Signed by: Village Panchayat President
Location:Erode
Date:2026.01.30 16:39:29

நிபந்தனைகள்

1. அரசாணை எண்-18 நநி மற்றும் குநீவ துறை நாள் 04.02.2019 ம அரசாணை எண்-16 நநி மற்றும் குநீவ துறை நாள் 31.01.2020 ன் படி மனைப்பிரிவு சாலை மற்றும் 0.5% பூமி உள்ளாட்சிக்கும், 0.5% பூமி TANGEDCO அல்லது உள்ளாட்சிக்கு தானமாக பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்.
2. அரசானை எண் 181 வீ.வ ம) நவ.து நாள் 09.12.2020-ல் தெரிவித்துள்ளவாறு சாலைகள், மழைநீர் வடிகால் வசதி மேல்நிலை நீர்தேக்க தொட்டியுடன் கூடிய குடிநீர் வசதிகள் மற்றும் தெருவிளக்குகள் ஆகியவை உள்ளாட்சியின் வீருப்பத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட பின்னர் இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
3. அரசானை எண் 141 வீட்டு வசதி மற்றும் நகர்புற வளர்ச்சித்துறை நாள் :16.07.2022 ன் படி நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டும்
4. இம்மனைப்பிரிவிற்கு உள்ளாட்சி இறுதி ஒப்புதல் அளிக்கும்முன் இடத்தினை எந்தத்துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும், எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்படியில் மாவட்டவருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் தனி அலுவலர் / வட்டார வளர்ச்சி அலுவலர், முத்துக்கவுண்டன்பாளையம் ஊராட்சி / வட்டார வளர்ச்சி அலுவலர் மொடக்குறிச்சி ஊராட்சி ஒன்றியம் அவர்கள் உறுதி செய்து கொள்ளவேண்டும்.
5. நில உரிமம் குறித்து வழங்கப்பட்ட சான்றுகள் மற்றும் பரிசீலனைக்கு சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் சரியானவையல்ல என்று அறியப்பட்டாலோ அல்லது மனைப்பிரிவுக்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்படக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டாலோ மனைப்பிரிவுக்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதல் எவ்வித முன்னறிவிப்பும் இன்றி நகர் ஊரமைப்பு இயக்குநர் சென்னை அவர்களால் ரத்து செய்யப்படும்.
6. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும் போது இவ்வரைபட நகலோடு நகர் ஊரமைப்புத்துறையில் ஒப்புதல் அளிக்கப்பட்ட ஆணையின் நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
7. ஒப்புதல் அளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்த வித மாற்றம் / விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் 6' x 4' என்ற அளவிலான நிரந்தர தகவல்பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
8. நகர் ஊரமைப்பு துறை சட்டப்பூர்வமாக தொழில்நுட்ப அனுமதி அளிப்பதன் மூலம் விண்ணப்பதாரரின் பேரில் உள்ள நில உரிமையை உறுதிப்படுத்தவில்லை தொழில்நுட்ப அனுமதி அளிப்பதற்கு முன்பு விண்ணப்பதாரரின் விண்ணப்பத்துடன் சமர்ப்பித்த ஆவணங்களில் (கிரையப்பத்திரம், பட்டா, தானப்பத்திரம், பொது அதிகார பத்திரம், மேலும் பல) விண்ணப்பதாரர் வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று மட்டுமே சரிபார்க்கப்படுகிறது. அதன் மூலம் முதற்கட்டமாக விண்ணப்பதாரருக்கு வளர்ச்சி செய்ய உரிமை உள்ளதா என்று பார்க்கப்படுகிறது. சொத்தினை வாங்க விரும்பும் எந்த ஒரு நபரும் விண்ணப்பதாரருக்கு சொத்தின் மீது உள்ள உரிமை தனியாக உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும் மேலும் அதன் மேல் வேறு யாரேனும் தனி நபர் உரிமை கோரினால் அவர்கள் அதனை பொருத்தமான தகுதியுள்ள நீதிமன்றத்தின் முன் தீர்த்துக்கொள்ளலாம். இதனை முடிவு செய்ய நகர் ஊரமைப்புத்துறை பொருத்தமான அமைப்பு அல்ல.
9. மனைப்பிரிவின் ஊடே மின்கம்பிப்பாதை செல்லுமாயின் சாலையின் போக்கிற்கேற்ப மாற்றி அமைத்த பின்னரே அ) நீக்கிய பின்னரே மனைப்பிரிவிற்கு உள்ளாட்சியால் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
10. பிரஸ்தாப மனைப்பிரிவுக்கு இவ்வலுவலகத்தால் தொழில் நுட்ப ஒப்புதல் மட்டுமே வழங்கப்படுகிறது. மனுதாரரின் நில உரிமத்தினை உறுதி செய்து பின்னரே உள்ளாட்சியில் இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
11. பிரஸ்தாப மனைப்பிரிவு அமையும் இடம் குறித்து நீதி மன்ற வழக்கு ஏதும் நிலுவையில் உள்ளது அறியப்படின் இவ்வுத்தரவு செல்லத்தக்கல்ல.
12. மனைப்பிரிவினை சுற்றி சுற்றுசுவர் (COMPOUND WALL) அமைக்கப்பட்டிருப்பின் அதனை அகற்றி அருகிலிருக்கும் இடத்திற்கு இணைப்பு பாதை அமையும் வகையில் சுற்றுசுவர் இடித்து அப்புறப்படுத்தப்பட வேண்டும்
13. மனைப்பிரிவில் ஊடே நீர்நிலை அமையுமாயின் நிலையில் உள்ளவாறு (அ) புலவரைபடத்தில் உள்ளவாறு நிலைநிறுத்தப்படல் வேண்டும் இதனை உள்ளாட்சி உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்படல் வேண்டும்.
14. மனைப்பிரிவு உள்ளாட்சி அனுமதி பெற்றபின் RERA-ல் உரிய அனுமதி பெற்ற பின்னர் விற்பனை செய்யப்பட வேண்டும்.
15. செயற்பொறியாளர், கீழ்பவானி வடிநிலக்கோட்டம், ஈரோடு அவர்களின் கடிதஎண் :வ.3/கோ.107/333M/2025/நாள்:25.05.2025 மற்றும் கடிதஎண்:வ.3/கோ.107/309M/2025/ நாள்:11.07.2025 கடிதத்தில் குறிப்பிட்டுள்ளவாறு மனுதாரரின் இடத்திற்கு செல்ல ரீ.ச.எண் : 229/5-ன் குறுக்கே 9.0மீ அகலத்தில் இரண்டு உத்தேச சிறுபாலங்கள் அமைக்க அனுமதி பெறப்பட்டதை தொடர்ந்து இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. இதனை ஊராட்சி உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்.
16. உதவி இயக்குநர் புவியியல் (ம) சுரங்கத்துறை ஈரோடு அவர்களின் கடித எண் ந.க. 718 / கனிமம் / 2025 நாள் :04.11.2025 படி இம்மனைபிரிவு அனுமதி கோரும் புலங்களிலிருந்து 300 மீ சுற்றளவிற்குள் குவாரி அனுமதி வ ழங்கப்பட்ட / வழங்கப்படவுள்ள குவாரிகள் ஏதும் இல்லை என தடையின்மை சான்று பெறப்பட்டதை தொடர்ந்து இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கப்படுகிறது. இதனை ஊராட்சி உறுதி செய்த பின்னரே இறுதி ஒப்புதல் வழங்கப்பட வேண்டும்

THIS REVISES SWP/ DTCP/ ERODE/ LAYOUT APPROVAL NO: 19/2026

SWP/ DTCP/ ERODE/ LAYOUT APPROVAL NO: 373/2025

நகர் ஊரமைப்பு துணை இயக்குநர் (பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
ஈரோடு மாவட்டம்.